காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு – 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 மறுப்பு அபிப்பிராயம்

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1972 இன் 1 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
ஆணைக்குழுவின் நிதிகத்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஆணைக்குழு தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் சபையை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க பேணப்படுகின்ற கணக்காய்வு அபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்டு ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை எனக்கு பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

	உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 40 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்தினை மீள் மதிப்புச் செய்யும் போது உரிய சொத்துக்கள் தொகுதி மீள்மதிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக கரந்தெனியவில் அமைந்துள்ள கட்டிடங்களும் லிதுல சுற்றுலா விடுதியும் மீள்மதிப்புச் செய்யப்படாது மிகுதிக் கட்டிடங்கள் மாத்திரம் மீள்மதிப்புச் செய்யப்பட்டிருந்தன.	2024 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகளை தயாரிக்கும் சந்தர்ப்பம் வரை கரந்தெனிய மற்றும் லிதுல கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைக்காமையின் காரணமாக அவற்றின் மீள்மதிப்பு பெறுமதியை செம்மையாக்குவதற்கு முடியாதிருந்தது.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க அனைத்து கட்டிடங்களையும் மீள்மதிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீள்மதிப்புக்கு முன்னர் ரூபா 14,804,400 தொகையான கட்டிடங்கள் ரூபா 17,900,000 பெறுமதிக்கு மீள்மதிப்புச் செய்து முழு மீள்மதிப்பு பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் முன்னைய பெறுமதியான ரூபா 14,800,400 தொகை கணக்குகளிலிருந்து நீக்கப்படாமையின் காரணமாக கட்டிடங்களின் கிரயமானது அந்த முன்னைய பெறுமதியாலும் மீள்மதிப்புச் செய்யப்பட்ட கட்டிடங்கள் தொடர்பாக மீள்மதிப்புச் செய்த மிகைக்கு செலவுவைக்கப்பட வேண்டிய தொகை ரூபா 7,161,122 ஆக இருந்த போதிலும் ரூபா 17,900,000 செலவு வைத்ததன் காரணமாக மீள்மதிப்பு மிகை ரூபா 10,738,876 இனாலும் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 90 ஆம் பந்திக்கு இணங்க ஆதனம், பொறி மற்றும் உபகரண வகுப்பினை மீள்மதிப்பு செய்த பெறுமதியில்	கட்டிடங்களின் வருடாந்த பெறுமானத் தேய்வினை சந்தர்ப்பத்தில் ஒரு பிழை இடம்பெற்றுள்ளதுடன் அது 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். மேலும் மொனராகலை, புத்தளம் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்ட அலுவலகங்கள் மீள்மதிப்புச் செய்யப்பட்டு எங்களுக்கு கிடைத்துள்ளதுடன் அதனை கணக்கீடு செய்யும் போது உரிய அதிகரிப்பினை மாத்திரம் கணக்கீடு செய்யாது முழுப் பெறுமதியும் மீளக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அது தெரியாமல் செய்த ஒரு பிழை எனவும் 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கும் ஆதனம், பொறி மற்றும் உபகரண வகுப்பினை மீள்மதிப்புச் செய்த பெறுமதிக்கு	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மீள்மதிப்பு பெறுபேறுகளை கணக்கீடு செய்வதற்கும் பயன்படுத்திய முறைமை மற்றும் முக்கியமான கருதுகோள்கள் முதலியன வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

வெளிப்படுத்துகையில் வெளிப்படுத்த வேண்டிய விடயங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.	வெளிப்படுத்துகையில் வெளிப்படுத்த வேண்டியவைகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமை சம்பந்தமாக இடம்பெற்ற பிழையானது 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஒரு குறிப்பினை ஈடுபடுத்தி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
(அ)	1972 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினைத் தோற்றுவித்த திகதியிலிருந்து சுவீகரித்த காணிகளை வெளியாருக்கு வழங்கியதன் மூலம் இன்னும் ஆணைக்குழுவிடம் காணப்படுகின்றது என அடையாளங்காணப்பட்ட காணிகளின் அளவு காணிப்பதிவேட்டிற்கு இணங்க (குத்தகைக்கு வழங்கிய 4,833 ஹெக்டயர் காணிகளை உள்ளடக்கி) 279,208 ஹெக்டயர்களாக இருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் 2,144 ஹெக்டயர்கள் மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பெறுமதியாக ரூபா 905,285,000 நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. .	மதிப்பீடு செய்வதற்காக காணிகளை அளவீடு செய்து திட்டவரைபடம் வழங்கப்பட வேண்டிய போதிலும் அனைத்து காணிகளும் அவ்வாறு அளவீடு செய்யப்படாததுடன் அளவீடு செய்யப்பட்ட குத்தகை காணிகளை மதிப்பீடு செய்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 2023-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு குத்தகை காணிகளுக்காக மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ள மதிப்பீட்டுப் பெறுமதி மாத்திரம் கணக்குகளின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த மதிப்பீட்டுப் பெறுமதி கிடைத்த முறைமைக்கு இணங்க கணக்குகளில் உள்ளடக்க வேண்டியுள்ளது. தற்பொழுது காணிகளில் ஒரு பகுதி மீள்மதிப்புச் செய்யப்பட்டு நிதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க 2024-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு காணிகளின் பெறுமதி ரூபா 905,285,000 ஆக காட்டப்பட்டுள்ளது. மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து இது தொடர்பாக ஆலோசனைகளைக் கேட்டபோது கொம்ட்ரோலர் ஜெனராலின் சுற்றறிக்கைக்கு இணங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தினூடாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என தெரியப்படுத்தப்பட்டிருந்தது.	காணப்படுகின்ற காணிகளின் நாளதுவரையான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தோட்ட கம்பனிகளிடமிருந்தும் தனிப்பட்டவர்களிடமிருந்தும் பொறுப்பேற்ற காணிகளுக்காக	இழப்பீட்டுக் கொடுப்பனவு தொடர்பாக தேவையான தகவல்கள் வேண்டப்படுகின்ற சந்தர்ப்பங்களில் சமர்ப்பிப்பதற்கு முடியும் எனத் தெரிவிக்கிறேன்.	பொறுப்பேற்ற காணிகளுக்காக செலுத்தப்பட்ட இழப்பீட்டு மற்றும் செலுத்த

	செலுத்த வேண்டிய இழப்பீட்டுப் பணம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 215,488,388 ஆக இருந்ததுடன் அதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு பட்டோலைகளில் (கட்டம் I மற்றும் II) இழப்பீட்டுப் கொடுப்பனவு சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அந்த மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதுள்ளது.		வேண்டிய இழப்பீடு சம்பந்தமான ஏடுகளை நாளதுவரையாக சரியாக பேணுதல் வேண்டும்.
(இ)	கட்டிடங்களின் வருடாந்த பெறுமானத் தேய்வினை கணக்கீடு செய்யும் போது ரூபா 2,703,876 அதிகரித்து கணக்கீடு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் அப்பெறுமதியால் குறைவடைந்து திரண்ட பெறுமானத் தேய்வு அப்பெறுமதியால் அதிகரித்திருந்தது.	கட்டிடங்களின் வருடாந்த பெறுமானத் தேய்வினை கணக்கீடு செய்த சந்தர்ப்பத்தில் ஒரு தவறு இடம்பெற்றுள்ளதுடன் அது 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்யப்படும்.	வருடாந்த பெறுமானத் தேய்வினை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டில் காணி விற்பனை முற்பணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,460,000 விற்பனை வருமானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததனால் அப்பெறுமதியால் விற்பனை வருமானம் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.	இதனை 2025 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு குறித்துக்கொள்கிறேன். இதற்கு பின்னர் காணி விற்பனை முற்பணங்களை காணி விற்பனை முற்பணக் கணக்கிற்கு மாத்திரம் செலவு வைப்பதற்கு நிறுவனத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் மாவட்ட அலுவலகங்களுக்கும் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆண்டிற்கான குத்தகை வாடகை வருமானத்தினை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.
(உ)	2022 மற்றும் 2023 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்காக முகமாலை தோட்டக் காணியை குத்தகைக்கு வழங்கியமைக்காக கிடைத்த ரூபா 660,000 குத்தகைப் பணம் மீளாய்வாண்டிற்கான குத்தகை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததனால் அப்பெறுமதியால் மீளாய்வாண்டிற்கான குத்தகை வருமானம் மிகையாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	ரன்பிம நவோதயவின் கீழ் வருடாந்த குத்தகை அடிப்படையில் வழங்கிய பாழ்ப்பாண மாவட்டம் தொடர்பான குத்தகை அறிவித்தலானது 2021 ஆம் ஆண்டின் போது அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகள் தொடர்பாக ஒரு தடவையிலான குத்தகைப் பணம் 2024 ஆம் ஆண்டின் போது பல சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டுள்ளது. அந்த செலுத்திய பணமும் யாழ்பாண மாவட்ட அலுவலகத்தின் மூலம் இரத்தினக்கல் வருமானமாக பிழையாக பற்றுச்சீட்டினை வழங்கி அப்பற்றுசீட்டும் வருமானப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. அதனையும் சரிசெய்து வருடாந்த குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததனாலும் இரத்தினக்கல் குத்தகை வருமானக்	ஆண்டிற்கான வருமானத்தை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.

		கணக்கிலிருந்து காணிக் குத்தகை கணக்கிற்கு முழுத் தொகையும் நாட்குறிப்பின் மூலம் மாற்றப்பட்டதன் மூலம் இப்பிழை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான பிழைகள் ஏற்படாத வகையில் உரிய பிரிவிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.	
(ஊ)	ஆணைக்குழுவினால் தென்னை பயிர்ச் செய்கை சபைக்கு வழங்கிய 812 ஏக்கர் 02 ரூட் 22 பேச்சர்ஸ் தொடர்பாக அறவிட வேண்டிய ரூபா 31,688,608 தொகையான பயன்படுத்துதல் கட்டணத்தை அடையாளங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த பயன்படுத்துதல் பணம் மற்றும் குத்தகைப் பணம் தொடர்பான பிரச்சினை சம்பந்தமாக அமைச்சு மட்டத்தில் கலந்துரையாடல் நடாத்தப்பட்டதுடன் மேற்கூறிய கலந்துரையாடலின் பெறுபேறுகளுக்கு இணங்க அறவிட வேண்டிய பயன்படுத்துதல் கட்டணத்தை 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன்.	பயன்படுத்துதல் கட்டணத்தை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.
(எ)	நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கருங்கல் குத்தகை, காணிக் குத்தகை, வணிக மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பாக முறையான உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமையால் நீண்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்ட மீதிகள் காணப்படுகின்றமையம் செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையும் மற்றும் ரூபா 466,314,236 பெறுமதியான கிடைக்க வேண்டிய 54 மீதிகள் மற்றும் ரூபா 7,105,291 பெறுமதியான செலுத்த வேண்டிய 17 மீதிகள் தொடர்பான மீதிகள் உறுதிப்படுத்தப்படாமையின் காரணமாக அம்மீதிகளின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதுள்ளது.	நிதிப்பிரிவினால் கடன்பட்டோர் மீதியை உறுதிப்படுத்துகின்ற 21 கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரதி கணக்காய்வு அத்தியட்சகருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவற்றில் 06 இற்காக தற்பொழுது பதில் கிடைத்துள்ளது. இதற்கு மேலதிகமாக மிகுதியான 34 கடன்பட்டோர் மீதிகளில் 32 மீதிகளுக்காக மீதிகளை உறுதிபடுத்தும் கடிதம் கணக்காய்விற்கான பிரதிகளுடன் உரிய குத்தகைதாரர்களுக்கு வருமானப் பிரிவினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் அவற்றில் எதற்கும் பதில் கிடைக்க வில்லை. மிகுதி கடன்பட்டோர் மீதிகளுக்காக உரிய காணிகளில் காணப்படும் பிரச்சினையான நிலைமைகளின் காரணமாக அனுப்பிவைக்கப்படவில்லை. கடன்கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்துகின்ற 04 கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரதிகள் கணக்காய்வு அத்தியட்சகருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவற்றில் 01 இற்காக தற்பொழுது பதில் கிடைத்துள்ளது.	கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை உறுதிப்படுத்தி அம்மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஏ)	05 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய 20 ஆண்டுகள் மற்றும் 30 ஆண்டுகளை மிகைத்த ரூபா 2,134,923,858 கூட்டுமொத்தமான மீதிகள் தொடர்பாக அந்த நிறுவனங்களிடமிருந்து ஆணைக்குழுவிற்குச் செலுத்துவதற்கு எந்த மீதியும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அம்மீதிகள் அறவிடப்பட வேண்டியவை என உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் ஆணைக்குழுவிடம் இல்லாததன் காரணமாக அறவீடு நிச்சயமற்றதாக இருந்ததுடன் அதற்காக ஒதுக்கீடுகள் செய்யப்படாததனால் உரிய மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.	வணிக மற்றும் ஏனைய மீதியான ரூபா 3,600,705,896 தொகை 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திடம் அப்பணத்தில் ரூபா 2,068,913,696 தொகையை அறவீடு செய்வதற்கு பல தடவைகள் முயற்சி செய்திருந்தும் அத்தொகை அவர்களின் கணக்குகளில் காணப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. எனவே காலம் கடந்துள்ளதனால் கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் 1972 ஆம் ஆண்டிலிருந்து காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள காணிகளின் முழு உரிமை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடம் உள்ளதனால் அவ்வாறான பெரிய தொகையை பதிவழிப்பதனால் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய பாரபட்சமான நிலைமையை கவனித்துப்பார்த்து அத்தொகை தொடர்ந்தும் அந்த வகையிலேயே காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கணக்குகளில் காணப்பட வேண்டும் என 2024-08-28 ஆந் திகதி நடைபெற்ற 811 ஆம் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரின் போது தீர்மானிக்கப்பட்டது. பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல்களின் பெறுபேறாக 2023 ஆம் ஆண்டில் அறவிட வேண்டியிருந்த ரூபா 3,126,685 பணத்தில் 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 354,597 தொகை ஐந்து கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கிடைத்துள்ளது. தற்பொழுது ஆணைக்குழுவினால் பணம் அறவிடப்படுவதனால் அப்பணத்தை அறவீடு செய்லவதற்கும் முறைப்படியாக அக்காணியை கூட்டுறவு சங்கங்களுக்கு ஒப்படைப்பதற்கான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டது. காணி அமைச்சிடம் அறவிட வேண்டிய பணம் சம்பந்தமாக அந்த அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. ஹதபிம அதிகாரசபை தற்பொழுது ஆணைக்குழுவிற்கு பணத்தை செலுத்துகின்றது என காணி	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரிவித்து பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		ஒப்படைப்பு பிரிவினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஆண்டின் இறுதியில் கணக்குகளிலிருந்து கழித்துக் காட்டுவதற்குத் தர்மானிக்கப்பட்டது. தேர்தல் பிரிவு கூட்டுறவு சங்கங்கள் சம்பந்தமாக மாகாண கூட்டுறவு திணைக்களத்திக்குச் சென்று தகவல்களை விசாரித்துப் பார்த்து கணக்குகளில் காட்டப்படுகின்ற தேர்தல் பிரிவு கூட்டுறவு சங்கங்கள் காணப்படுகின்றதா இல்லையாயின் கலைக்கப்பட்டிருந்தால் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பான தகவல்களை ஆராய்ந்துபார்த்து கிடைக்கும் தகவல்களை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்து தீர்மானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
(ஐ)	மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள வணிக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் ரூபா 3,600,705,896 ஆனதுடன் அதில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட, 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட, 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகள் முறையே ரூபா 307,034,880, ரூபா 161,394,692 மற்றும் ரூபா 2,346,279,038 ஆகும். அறவீடு செய்தல் நிச்சயமற்றதான அந்த நீண்டகால ரூபா 2,814,708,610 மீதிக்காக 1988 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 8,270,355 ஒதுக்கீட்டினைத் தவிர்த:து எந்த ஒதுக்கீடும் இன்றுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	நிதிக்கூற்றுக்களில் அறவிட முடியாக் கடனாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 8,270,355 தொகையானது 1998 ஆம் ஆண்டிலேயே அறவிடமுடியாக் கடனாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டதானது பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள், தேர்தல் பிரிவு கூட்டுறவு சங்கம், அரசாங்க துறையிலுள்ள அறவிட வேண்டிய கடன்பட்டோர் மீதிகள் என்பவற்றிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட அறவிட முடியா கடன் தொகைகளாகும். 1998 ஆம் ஆண்டின் பின்னர் இன்று வரை ஏனைய எந்த அறவிடமுடியா கடன் ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. 2025 ஆம் ஆண்டிலிருந்து அறவிடமுடியாக் கடனுக்கு ஒதுக்கீடு செய்தல் சம்பந்தமாக கொள்கைத் தீர்மானம் எடுப்பதற்காக இக்கணக்காய்வு ஐய வினாவினையும் தொடர்பபடுத்தி ஆணைக்குழுவிற்கு ஆணைக்குழு பத்திரத்தினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடன்பட்டோர் மீதிகளுக்காக அறவிடமுடியா கடனுக்கு ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
நிதிக்கூற்றுக்களில் நானாவித கடன்பட்டோர்களின் கீழ் காட்டப்படுகின்ற களுத்துறை, கம்பஹா ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் அமைந்துள்ள 08 காணித் துண்டுகளை குத்தகைக்குப் பெற்ற நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,311,017 தொகை 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டிருந்தும் உரிய குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நானாவித கட்ன்பட்டோர்களின் கீழ் காட்டப்பட்டுள்ள களுத்துறை, கம்பஹா ஆகிய இரண்டு மாவட்டங்களில் அமைந்துள்ள 08 காணித்துண்டுகளை குத்தகைக்குப் பெற்ற நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,311,017 தொகை இதற்கு முன்னர் பணத்தை செலுத்தி உறுதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என அடையாளங்காணப்பட்டுள்ளது. இவ்விடயம் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2025-03-18 ஆந் திகதி நடைபெற்ற 816 ஆவது ஆணைக்குழு கூட்டத்தின் 12990 ஆம் இலக்க ஆணைக்குழு பத்திரத்திற்கு இணங்க இத்தவறினை கணக்குகளில் சரிசெய்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கிணங்க 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இக்கடன்பட்டோர் மீதியினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவையான குத்தகைப் பணம் அறவீடு செய்யப்படுதல் வேண்டும்.

1.6.2 செலுத்தவேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி விற்பனை முற்பண மீதியான ரூபா 11,322,992 தொகையில் 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டுவரும் ரூபா 11,202,992 மொத்த தொகையான மீதி உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அந்த விற்பனை முற்பண மீதி தொடர்பான காணியை அடையாளங்கண்டு தீர்த்துவைப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த விற்பனை முற்பண மீதிகளுக்குரிய காணி சம்பந்தமாக அடையாளங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அதற்கிணங்க எதிர்காலத்தில் இந்த மீதியினைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	விற்பனை முற்பணங்களை தீர்த்துவைத்தல் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 14,080,050 மொத்த தொகையான காணிக் குத்தகை முற்பணக் கணக்கு மீதியில் உள்ளடக்கப்பட்ட 269 நபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 11,215,850 முற்பணத் தொகையானது 19 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தும் உரிய காணிகளை சட்ட ரீதியாக குத்தகைக்கு	இம்மீதியில் உள்ளக்கப்பட்ட 2002 - 2004 காலப்பகுதிக்குள் குத்தகைக்கு வழங்குவதற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் கைவிடப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைசசரவை தீர்மானம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர்	காணிகளின் குத்தகை முற்பணங்கள் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும்.

	வழங்குவதற்கு அல்லது முற்பணங்களை மீளத்தீர்த்துவைப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	மேற்கூறிய தீர்மானத்திற்கு இணங்க மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	
(இ)	ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கில் வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளில் உள்ளடக்கப்பட்ட சட்டரீதியான ஆவணங்கள் முத்திரைக் கட்டண முறபணத் தொகையான ரூபா 6,582,904 மீதியானது 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்துவைக்கப்படாது காணப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.	முத்திரைக் கட்டண முற்பணங்களானது காணிகளை விற்பனை செய்வதற்காக பணத்தைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அறவிடப்படுகின்றது. இந்த சட்டரீதியான ஆவணங்கள் முத்திரைக் கட்ட முற்பணங்களானது கணக்குகளில் காணப்படுவதுடன் இக்கணக்குகளை தீர்த்துவைத்தலானது உறுதிகளை வழங்குதல் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே மேற்கெர்ளப்படும். இக்கணக்கில் 2024-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 6,582,904 தொகை 03 ஆண்டுகளுக்குள் காணப்பட்ட மீதிகள் இல்லை. 2024-01-01 ஆந் திகதியில் உள்ளவாறு இக்கணக்கில் ரூபா 6,139,325 காணப்பட்டிருந்ததுடன் அவற்றில் 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 1,905,070 தொகை தீர்த்துவைக்கப்பட்டிருந்ததுடன் புதிதாக 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 2,348,649 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கிணங்க சட்டரீதியான ஆவணங்கள் முத்திரைக் கட்டண முற்பணக் கணக்கின் மீதி 03 ஆண்டுகள் காலமாக தீர்த்துதுவைத்தல் இடம்பெறவில்லை என்பதனை இணங்கி கொள்ள முடியாதுள்ளது.	முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	**இணக்கமின்மை**	**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
(அ)	1972 இன் I ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச் சட்டத்தின் 44(ஒள) பிரிவு	பிரிவிற்கு முரணாக ஆணைக்குழுவினால் சேவையில் ஈடுபடுத்தியிருக்கின்ற நபர்களுக்கு சேமலாப நிதியத்தினை உருவாக்குதல் மற்றும் நலன்புரி, பொழுது போக்கு, விளையாட்டு	காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 44 (ஒள) பிரிவின் பிரகாரம் நிகழ்காலத்தில் மாத்திரமல்லாது 1982-1984 காலப்பகுதியின் போதும் ஊழியர்களை அடிப்படையாகக்	அதிகாரச் சட்டத்தின் விளக்கத்தை சட்ட ரீதியாக விளங்கிக் கொண்டு அமுல்ப்படுத்துதல் வேண்டும்.

		வசதிகளும் மற்றும் வீடமைப்பு விடுதிகள் மற்றும் ஏனைய இடவசதிகள் வழங்குதல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஆணைக்குழுவில் 05 ஆண்டுகள் தொடர்ச்சியாக சேவையாற்றியுள்ள ஒரு ஊழியருக்கு ஒரு பேச்சர்ஸ் ரூபா 1,000 பெறுமதிக்கு 20 பேர்ச்சஸ் விதம் வழங்குவது தொடர்பாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு இணங்க 2009 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை 395 உத்தியோகத்தர்களுக்கு 49 ஏக்கர் 35.64 பேச்சர்ஸ் காணி வழங்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் காணிகள் வழங்கும் குறிக்கோளில் ஆணைக்குழுவின் 120 ஊழியர்களிடமிருந்து ரூபா 10,000 வீதம் ரூபா 1,200,000 பெறுமதியான முற்பணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.	கொண்டு காணி வழங்குதல் இடம்பெற்றுள்ளதுடன் அக்காலப்பகுதியின் போது பிரதேசத்திற்குப் பிரதேசம் காணியை வழங்குதல் 10 பேர்ச்சஸ் அல்லது 20 பேர்ச்ஸினை மிகைக்கும் வகையிலான அளவில் காணிகள் வழங்குதல் இடம்பெற்றுள்ளது. என ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆணைக்குழுவினால் எடுக்கப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானங்களின் பிரகாரம் இன்றுவரை அமுல்ப்படுத்தப்படுகின்ற ஊழியர்களுக்கு காணி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பல்வேறு இடங்களில் காணிகளை அடையாங்கண்டதன் பின்னர் ஊழியர்களை அடிப்படையாகக் கொண்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என குறிப்பிடுகிறேன்.	
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 1.1 ஆம் பந்தி	அரசாங்க செவையில் பதவி விகிக்கின்ற ஒரு உத்தியோகத்தர் அரசாங்க சேவையில் மற்றுமொரு பதவியில் சேவையை பொறுப்பேற்பதற்காக தாம் வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டிய போதிலும் ஒரு உத்தியோகத்தர் 2020 ஒக்தோபர் 23 ஆந் திகதியிலிருந்து 2022 மார்ச் 31 ஆந் திகதி வரை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் செயற்திட்ட பணிப்பாளர் பதவியில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் போது 2021 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மகனெகும வீதி நிர்மாணங்கள் இயந்திர	அமைச்சரின் அதிகாரத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் எனவும் மிண்டும் பணத்தை செலுத்துமாறு கடிதத்தின் மூலம் தெரியப்படுத்திய போதிலும் அவரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தை நியாயப்படுத்தி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது சட்டமா அதிபரிடம் இது சம்பந்தமாக ஆலோசனை வேண்டப்பட்டிருந்தும் இதுவரை ஆலோசனை கிடைக்கவில்லை.	கவனயீனமாக செலுத்தப்பட்ட சம்பளமும் படிகளும் அறவிடப்படுதல் வேண்டும்.

	உபகரண கம்பனியின் பிரதி பொது முகாமையாளர் (நிருவாகம்) பதவிக்கு ஒரு ஆண்டு நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டு நிரந்தர அடிப்படையில் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டதுடன் ஒரே காலத்தில் 02 நிறுவனங்களிலிருந்தும் சம்பளமும் படிகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஆணைக்குழுவினால் உரிய உத்தியோகத்தரின் வருகை மற்றும் வழங்கிய சேவை தொடர்பாக கவனம் செலுத்தாது சம்பளமும் படிகளுமாக 2020 ஒக்தோபர் மாதத்திலிருந்து 2022 மார்ச் மாதம் வரை ரூபா 2,038,979 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 283,260,782 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 636,050,744 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 352,789,062 விழ்சிசி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு வருமானமும் நிதி வருமானமும் ரூபா 338,643,718 ஆல் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்ளின் போக்கு பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் காணிப் பயன்பாட்டுக் கட்டணம் 482 சதவீதத்தால் அதிகரிக்கையில் காணிசுவீகரிப்பு விற்பனை வருமானம், காணி குத்தகை வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் முறையே 7 சதவீதம், 28 சதவீதம், 24 சதவீதம், 63 சதவீதம் ஆகிய பெறுமதிகளால் குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான போக்குவரத்துப்படி, மேலதிக நேர வேலைப்படி, வாகன வாடகை, போக்குவரத்து கட்டணம், சட்ட கட்டணம் என்பன முறையே 16 சதவீதம், 21 சதவீதம், 92 சதவீதம் மற்றும் 04 சதவீதத்தால் குறைவடைந்திருந்தும் ஊழியர் பணிக்கொடை 331 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும் மிகையூதியத்திற்காக மீளாய்வாண்டில் செலவு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

(அ) ஆண்டிற்கான நடைமுறை விகிதம் 9:1 ஆக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் அந்த விகதம் 4:1 ஆகும். அதற்கிணங்க நடைமுறை விகிதத்தினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிக

பெறுமதியில் பேணப்பட்டிருந்ததுடன் தொழிற்படு மூலதன தேவைப்பாட்டிற்கு மிகையாக நடைமுறைச் சொத்துக்களில் பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2023 ஆம் ஆண்டில் 34 சதவீதமாகக் காணப்பட்ட சமப்பாட்டு விகிதம் மீளாய்வாண்டின் போது 18 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தும் ஆணைக்குழுவினால முழுப்பொறுப்புக்களையும் தீர்த்துவைப்பதற்கு தேவையான அளவிற்கு மிகையாக உரிமை மூலதனம் பேணப்பட்டு வந்திருந்தது என அவதானிக்கப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) பாரம்பரியமான உறுதி வழங்கும் விழாவிற்குச் சமாந்தரமாக ''அனைவருக்கும் உரித்துள்ள நிலம்'' உறுதி வழங்கும் விழா 2024 மார்ச் 30 ஆந் திகதி கண்டி போகம்பர விளையாட்டரங்கில் நடாத்தப்பட்டு அதில் 2,700 உறுதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 10,106,158 செலவு செய்யப்பட்டிருந்தது.	பல்வேறு பிரதேசங்களில் காணிகளின் சட்டரீதியான உரிமை இல்லாத 2,700 நபர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை அறவிட்டு உறுதிகளை வழங்குவதற்காக ஆணைக்குழுவின் அங்கீகாரம் 2023-08-25 ஆந் திகதி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காணிகளை வெளியாருக்கு பகிர்ந்தளித்தல் சம்பந்தமாக 2023-05-25 ஆந் திகதி சனாதிபதி செயலகத்தினால் காணிகளை வெளியாருக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பான நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்திவைத்தல் என்ற தலைப்பில் சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளருக்கான பிரதியுடன் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அக்கடிதத்தின் இரண்டாவது பந்தியின் பிரகாரம் இப்போதும் காணிகளை வெளியாருக்கு பகிர்ந்தளிப்பது சம்பந்தமாக ஏதாவது ஒரு செயற்பாட்டினை நிறைவேற்றுவதாயின் அது சம்பந்தமாக சனாதிபதி செயலாகத்திற்கு தெரியப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2024-03-15 ஆந் திகதிய காணி அமைச்சின் செயலாளரின் மூலம் சனாதிபதி செயலகத்திற்கு மாவட்ட அலுவலக மட்டத்தில் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட உறுதிகளின் எண்ணிக்கை தொடர்பாக ஒரு அறிக்கையினை தெரிந்து கொள்வதற்காக அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கௌரவ சுற்றுலா மற்றும் காணி அமைச்சர், கௌரவ சனாதிபதி அவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலுக்கு இணங்க உறுதிகளை வழங்குவதற்கு	காணிகளை பகிர்ந்தளிக்கும் போது அத்தியவசியமான செலவுகளுக்காக மாத்திரம் செலவு செய்யப்படுதல் வேண்டும்.

தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது எனவும் அதற்கிணங்க அச்செயற்பாடுகளை நிறைவேற்றுமாறும் இந்த ஆணைக்குழுவிற்கு தெரியப்படுத்தப்பட்டது.

இந்த விழா முன்னாள் சனாதிபதி அவர்களின் தலைமையில் தலைவரை உள்ளடக்கி ஏனைய அரசாங்க நிறுவனத்தின் தலைவரின் பங்குபற்றலில் கலந்துரையாடலினை நடாத்தி அக்கலந்துரையாடலின் போதும் 2024-03-30 ஆந் திகதி கண்டி போஹம்பர விளையாட்டு மைதானத்தில் நடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட உறுதி வழங்குதல் விழா தொடர்பாக தெரியப்படுத்துவதனையும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன்.

(ஆ) 2016 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை கிரகரி மாவத்தை மற்றும் இலக்கம் 475 கடுவல வீதி பத்தரமுல்ல என்ற இடத்தில் வாடகை அடிப்படையில் நிறுவனம் செயற்பட்டு வந்ததுடன் அதற்கான பரிகாரமாக 2023 நவம்பர் 07 ஆந் திகதிய அ.ம.ப. 23/186/615/002-II ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க காணி அமைச்சின் நான்காம் மாடியிலுள்ள அலுவலக கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை வழங்கிய அங்கீகாரத்தினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது வாடகை அடிப்படையில் அலுவலக நடவடிக்கைகளை மேற்கொண்ட பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்டிடம் ரூபா 240 மில்லியன் விலைக்கு 2024 யூன் மாதம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அக்கட்டிடம் ஹோட்டலுக்கு பொருத்தமானதாக கட்டிடத்திற்குள் நீர்த்தொட்டி பெசேஜ் கொரிடோர் என்பன அமைந்திருந்தமையும் இருண்ட இயல்பினை கொண்டிருந்தமையும் காரணமாக அலுவலகத்திற்கு பொருத்தமான ஒரு கட்டிடம் இல்லை என அவதானிக்கப்பட்டது.

2016-12-01 ஆந் திகதியிலிருந்து காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் செயற்பட்டுவந்த இலக்கம் 475, கடுவல விதி, பத்தரமுல்லை என்ற இடத்தில் வாடகை அடிப்படையில் செயற்பட்டு வந்ததுடன் அடிக்கடி பல சந்தர்ப்பங்களில் முறையான பெறுகை நடைமுறைக்கு இணங்க வாடகை அடிப்படையில் மற்றுமொரு கட்டிடத்திற்கு செல்வதற்கு முயற்சி செய்து 2024 யூன் 25 ஆந் திகதிய அமப/24/1153/615/014-I ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் மற்றும் முறையான நடைமுறையினூடாக இக்கட்டிடத்தினை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 29 பேச்சஸில் அமைந்துள்ள கட்டிட வளவுக்கு மேலதிகமாக அதற்கு அருகாமையில் அமைந்துள்ள 6.5 பேச்சர்ஸ் வெற்றுக் காணியையும் உள்ளடக்கி 240 மில்லியன் பெறுமதிக்கு உரிய மதிப்பீட்டு அறிக்கையினையும் பெற்று உரிய கட்டிடம் மற்றும் அருகாமையிலுள்ள காணியை கொள்வனவு செய்தல் இடம்பெற்றது. இக்கட்டிடம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என அடையாளங்காணப்பட்டதுடன் அந்த நடவடிக்கைகள் தற்பொழுது பெறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் அதற்கிணங்க விரிவான

கட்டிடத்துடனான வளவினை அபிவிருத்தி செய்து குறைபாடுகளை சரிசெய்தல் வேண்டும்.

இடவசதிகளுடன் ஆவணக்காப்பகத்தை பேணுவது சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் மேலும் குறிப்பிடுகிறேன்.

தற்போதைய கட்டிடங்களை மேலும் அபிவிருத்தி செய்தல் மற்றும் இடவசதிகளை விரிவுபடுத்துவதற்காக மத்திய ஆலோசனை பணியகத்தினை நியமித்து 2024-08-28 ஆந் திகதிய 811 ஆவது ஆணைக்குழு கூட்டத்தொடரின் 12894 ஆம் இலக்க ஆணைக்குழு பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கிணங்க பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான ஆலோசனை பணியகத்தினால் கட்டிடத்துடனான வளவினை அபிவிருத்தி செய்வதற்காகவும் அருகாமையிலுள்ள காணியில் புதிய கட்டிடத்தினை நிர்மாணிக்கும் செயற்பாடு சம்பந்தமாகவும் பிரேரணை மற்றும் உடன்டிக்கையை தயாரிக்கும் நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்று வருகின்றது.

(இ) மாத்தளை பேகுரூப் தோட்டத்தின் 1723 ஏக்கர் காணியை வெளியிடப்பட்ட நபருக்கு நியதிச்சட்ட நிர்ணயிப்பின் கீழ் அக்காணியின் 50 ஏக்கர்கள் 191/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலினால் திட்டவரைபட இலக்கம் 404 மற்றும் 497 இன் மூலம் வழங்கப்பட்டிருந்தும் மீண்டும் திட்டவரைபட இலக்கம் 2229 மற்றும் 2230 இன் மூலம் 1653 ஆம் இலக்க பரிமாற்று உறுதியின் மூலம் 32 ஏக்கர்கள் வழங்கப்பட்டிருந்தன.
இக்காணியை நக்கிள்ஸ் சரணாலயத்தினால் பொறுப்பேற்பதாகத் தெரிவித்து கொழும்பு மாவட்டத்தில் 25 ஏக்கர்களை வழங்குவதற்கு ஆணைக்குழு அங்கீகரித்து அதில் 11 ஏக்கர்கள் 15725 ஆம் இலக்க உறுதியின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறிய பரிமாற்று உறுதியின் மூலம் வழங்கிய 32 ஏக்கர்களின் உறுதியை இரத்துச் செய்வதற்கு ஆணைக்குழு தீர்மானித்திருந்தும் அது இரத்துச் மஹ/403 ஆம் இலக்க வெளிப்படுத்துனர் திரு.சிதம்பர ரெங்கனாதன் அவர்களின் நியதிச்சட்டம் நிர்ணயித்த பேகுரூப் எனும் பெயருள்ள காணி மா/404 ஆம் இலக்கத்தின் கீழ் அளவீடு செய்யப்பட்டு திடவரைபடத்தின் கிழ் அளவீடு செய்யப்பட்டு பகிரப்படாத 50 ஏக்கர்கள் அளவானவை 178/2 ஆம் இலக்க 1975-08-25 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. மா/404 ஆம் இலக்க திட்ட வரைபடத்திற்குரிய காணி வன பாதுக்காப்பு திணைக்களத்தறிகு ஒப்படைக்கப்பட்டுளளது என குறிப்பிட்டதனால் நியதிச்சட்ட நிர்ணயிப்பு திருத்தம் செய்யப்பட்டு மா/404 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் 05 ஆம் இலக்க காணித்துண்டு மற்றும் மா/407 ஆம் இலக்க திட்ட வரைபடத்தின் கீழ் 05 மற்றும் 07 ஆம் இலக்க காணித:துண்டுகளின் பிரேகுரூப எனும் பெயருள்ள காணியின் பகிரப்படாத 50 ஏக்கர்கள் அளவிலான காணி 191/7 ஆம் இலக்க 1982-05-06 திகதிய அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம்

புலனாய்வினை மேற்கொண்டு அதற்கிணங்க பொறுப்புக் கூற வேண்டிய நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	செய்யப்பட்டிருக்காததுடன் அக்காணி அவரினால் விற்க்கப்பட்டது எனவும் வெளிப்படுத்தப்பட்டது. இக்காணி அரசாங்கத்தின் மூலம் சுவீகரிக்கப்பட்டதா என்பதனை லக்கல பிரதேச செயலாளரிடம் மேற்கொண்ட உறுதிப்படுத்தல்களுக்கு இணங்க அக்காணி சுவீகரிக்கப்படவில்லை என வெளிப்படுத்தப்பட்டது. லக்கல போன்ற மிகவும் தொலைவிலுள்ள கஸ்டமான பிரதேசங்களில் வெளிப்படுத்தப்பட்ட பிரிகக்படாத காணிக்காக கொழும்பு போன்ற சனநெருக்கடியுள்ள விலை அதிகமாக உள்ள பிரதேசங்களிலிருந்து காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இதன் போது இந்த நபருக்காக இடப்பட்ட அவரின் கையொப்பமானது தொடக்கத்தில் இடப்பட்ட கையொப்பத்துடன் பொருந்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	வழங்கப்பட்டுள்ளது. பிரேகுரூப் தோட்டம் எனும் பெயரிலான காணி வன பாதுகாப்பு திணைகளத்தினால் மீண்டும் நியதிச்சட்ட நிர்ணயிப்புக்காக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட காணியில் 32 ஏக்கர்கள் அளவிலான மாற்று காணியை வழங்குவதற்கு 1983-03-07 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது. அதற்கிணங்க 2229 மற்றும் 2230 ஆம் இலக்கங்களின் மூலம் 32 ஏக்கர்கள் அளவானவை 1653 ஆம் இலக்க உறுதியின் மூலம் வெளிப்படுத்துனருக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்காணி அளவானது விற்கப்பட்டுள்ளது என கணக்காய்வின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தீர்வு உறுதிப்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் சிதம்பரம் ரெங்கநாதன் என்ற நபர் மேற்கொண்ட வேண்டுதல்களுக்கு இணங்க மேலே குறிப்பிட்ட 32 ஏக்கர் காணிக்காக கொழும்பு மாவட்டத்தில் கனேதொட தோட்டக் காணியில் மாற்றுக் காணியை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 15723 ஆம் இலக்க உறுதியின் மூலம் 11 ஏக்கர்கள் அளவானதை மாற்றுக் காணியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் பிரேகுரூப் எனும் பெயருள்ள முழுக் காணியும் வன பர்துகாப்பு திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்றது என மாவட்ட பணிப்பாளர் கூறுவதனால் அதற்காக சுவீகரிப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்படும் எனக் கூறுவதனால் அவ்வாறான காணியின் பயன்படுத்தும் உரிமையை மீளப்பெற்றுக்கொள்வதற்கான இயலுமை இல்லை. அவ்வாறே சிதம்பரம் ரெங்கநாதன் என்ற நபரின் கையொப்பம் தொடர்பாக கையெழுத்து பரீட்சிப்பின் ஊடாக விசேட உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.	
(ஈ)	ஆணைக்குழுவிற்குச் சொந்தமான கம்பஹா மாவட்டத்தில் அமைந்துள்ள 28.52 ஹெக்டயர் அளவிலான இம்புல்கஸ் வாடிய எனும் பெயரிலான காணி மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டு சபையின் மூலம் நீண்டகால குத்தகை அடிப்படையில் 1992 ஆம் ஆண்டிலிருந்து 53 ஆண்டுகளுக்கு சிலாபம் பெருந்தோட்ட கம்பனிக்கு	கம்பஹா மாவட்டத்தில் அமைந்துள்ள இம்புல்கஸ் வாடிய காணி கொ/1717 ஆம் இலக்க வெளிப்படுத்துனரினால் 105 எக்கர் 02 ரூட் 26 பேச்சர்ஸ் அளவிலான காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்காணியின் அளவில் 28.52 ஹெக்டயர் அளவானவை (70 ஏக்கர் 01 ரூட் 36 பேச்சர்ஸ்) 468/21 ஆம் இலக்க 1987-	புலனாய்லவினை மேற்கொண்டு அதற்கிணங்க பொறுப்புக்கூற வேண்டிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்படைக்கப்பட்டிருந்தது.
அக்காணியில் ஆணைக்குழு 2021 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய 2239/38 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் 25 ஏக்கர்களை மீண்டும் பொறுப்பேற்று ஆணைக்குழுவிற்கு காணியை வெளிப்படுத்திய நபரின் பிள்ளையின் இரண்டு பிள்ளைகளுக்கு மாற்று காணிகளை ஒப்படைத்தலின் கீழ் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு பிள்ளைகளின் ' பிள்ளைகளுக்கு காணிகளை ஒப்படைப்பதற்கு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லாததுடன் இந்த ஒப்படைப்பு சம்பந்தமாக சனாதிபதி மற்றும் காணி அமைச்சின் செயலாளர் ஆகிய நபர்களின் எதிர்பபினையும் ஆணைக்குழு கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாதிருந்ததுடன் மிகவும் தொலைவான பிரதேசங்களின் வெளிப்படுத்தப்பட்ட பிரிக்கப்படாத காணிகளுக்காக சனநெருசலான அதிக விலையுள்ள பிரதேசங்களிலிருந்து காணிகள் வழங்கபபட்டள்ளது எனவும் தற்பொழுது இக்காணிகள் துண்டு போடப்பட்டு அதிக விலைக்கு விற்கப்பட்டுள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது.

08-28 ஆந் திகதிய அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானியின் மூலம் 1972 இன் 1 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 22, 23 மற்றும் 42 ஆம் உப பிரிவுகளுக்கு உட்பட்டு மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. பின்னர் அக்காணி மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் சிலாபம் பெருந்தோட்ட கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

காணி மறுசீரமைப்பு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சட்டரீதியான பிணைப்பாக வெளிப்படுத்துனரின் (மரணமடைந்த) வாரிசுவுக்கு 25 ஏக்கர்கள் அளவானதை இக்காணியிலிருந்து வழங்குமாறு வேண்டிக் கொள்ளப்பட்டது.
அதற்கிணஙக 11485 ஆம் இலக்க 2021-07-08 ஆந் திகதிய ஆணைக்குழு தீர்மானத்தின் கீழ் இம்புல்கஸ்வாடிய காணியிலிருந்து 25 ஏக்கர்கள் அளவிலானதை சுவீகரித்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அக்காணியை விடுவித்துக்கொள்வதற்காக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும் சிலாபம் பெருந்தொட்ட கம்பனியும் 2020-12-17 ஆந் திகதிய 2020-12/10/PL05 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் கீழ் வழங்கிய இணகக்பாடு 2020-12-31 ஆந் திகதி காணி மறுசீரமைபபு ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டது.
அதற்கிணங்க 2239/38 ஆம் இலக்க 2021-08-15 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உரிய காணிப்பகுதி சுவீகரிக்கப்பட்டது. இச்சுவீகரிப்பு சம்பந்தமாக சிலாபம் பெருந்தோட்ட கம்பனியால் CA(W)416/2022 ஆம் இலக்க வழக்கு தொடக்கப்பட்டிருந்தும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னர் உரிய முறைப்பாட்டு கம்பனியால் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர் உரிய காணிப் பகுதியானது 15180 ஆம் இலக்க உறுதியின் மூலம் வெளிப்படுத்துனரின் பிள்ளையான திருமதி மாலனி நாணயக்காரவின் (மரணமடைந்த) வாரிசுக்காரரான தம்மிக மென்டிஸ் மற்றும் ராஜிதா மென்டிஸ் ஆகிய நபர்களுக்கு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது.

		காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் பிள்ளைகளுக்கு காணிகளை வழங்குவதற்கு அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தும் பேரப்பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் குறிப்பிடப்படவில்லை. ஆணைக்குழு தனது விருப்பின் பெரில் நபர்களுக்கு ஏற்பட்டுள்ளப்பட்ட நியாயமின்மைகளுக்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உருவாகியுள்ள நடைமுறைப பிரச்சினைகளின் அடிப்படையில் நிவாரணங்களை வழங்குவதற்காக ஏனைய எற்பாடுகளுக்கு இணங்க அமுல்ப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றது.	
(உ)	திறைசேரி செயலாளரின் 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க அரசாங்க செலவகளை கட்டுப்படுத்துகின்ற சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் நிறுத்தப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் ஆணைக்குழுவின் 06 மாவட்ட அலுவலகங்களை தனியார் தரப்பினர்களுக்குச் சொந்தமான கட்டிடங்களில் வாடகை அடிப்படையில் செயற்படுத்துவதற்காக 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகள் தொடரபாக குத்தகை வாடகையாக ரூபா 37,811,393 செலவு செய்யப்பட்டிருந்தது. ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது 50 ஆண்டுகளை அண்மித்திருந்தும் ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளில் அலுவலகங்களை அமைப்பதற்கு முகாமைத்துவம் தவறியுள்ளது என மேலும் அவதானிக்கப்பட்டது.	வாடகை அடிப்படையில் செயற்பட்டு வந்த மாவட்ட அலுவலகங்களை அரசாங்க கட்டிடங்களில் ஸ்தாபிப்பதற்காக இடவசதிகள் உள்ளதா எனத் தேடிப்பார்த்த போதிலும் இடவசதிகளை தேடிக்கண்டு பிடிக்க முடியாதுள்ளது. அதற்கிணங்க 08 மாவட்ட அலுவலகங்கள் தனியார் கட்டிடங்களிலும் 09 மாவட்ட அலுவலகங்கள் அரசாங்க மற்றும் அரசுசார்ந்த கட்டிடங்களிலும் செயற்பட்டு வருவதுடன் 03 மாவட்ட அலுவலகங்கள் ஆணைக்குழுவிற்குச் சொந்தமான கட்டிடங்களில் செயற்பட்டு வருகின்றது. எவ்வாறாயினும் திறைசேரி செயலாளரின் 2024-02-28 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சற்றறிக்கையின் மூலம் புதிய கட்டிடங்களை அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் கைவிடப்பட்டுள்ள போதிலும் குத்தகை வாடகை உடன்படிக்கையின் அடிப்படையில் தற்பொழுது காணப்படுகின்ற கட்டிடங்களை கிரய விளைதிறனை கருத்தில் கொண்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்டையில் மேலும் நீடிக்கும் இயலுமை காணப்படுகின்றது.	மாவட்ட அலுவலகங்களை அரசாங்க கட்டிடங்களில் ஸ்தாபிப்தற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஊ)	ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காலி குருந்துகஹ ஹெதெப்மேயிலுளள 31.5 பேச்சஸ் காணியுடனான கட்டிடத்தில் காலி மாவட்ட அலுவலகத்தினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது காலி நகரத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள 9.79 பேச்சர்ஸ் காணியில் அமைந்துள்ள ஒரு கட்டிடம் வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டு அந்த அலுவலகம் செயற்படுத்தப்பட்டதன் காரணமாக 2018 ஆம் ஆண்டிலிருந்து 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கட்டிட வாடகையாக ரூபா 5,805,000 விளைவற்ற செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.இன்றுவரை காலி குருந்துகஹ ஹெதெப்மவில் அமைந்துள்ள ஆணைக்குழுவிற்குச் சொந்தமான கட்டிடம் காணி நிர்ணயத் திணைக்களத்திற்கு அலுவலகத்திற்காக ஒரு மாதத்திற்கு ரூபா 22,000 வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.	ஆணைக்குழுவிற்குச் சொந்தமான குருந்துகஹ ஹெதெப்மே இல் அமைந்துள்ள கட்டிடம் 2018 ஆம் ஆண்டில் பத்து இலட்சம் உறுதிகள் வேலைத் திட்டத்தினை ஒழுங்குபடுத்துதல் செயற்திட்டம் காலி மாவட்டத்தினை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்டதனால் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான உப அலுவலகமாக இந்த இடம் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் காலி மாவட்டத்தின் ஒட்டுமொத்த ஆளணியினர்களுக்கும் போதுமான இடவசதிகள் இல்லாமை. காலி நகரத்திலிருந்து குருந்துகஹ ஹெதெப்ம உப அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்திற்கு பயணம் செய்வதற்கு சாதாரண விதியில் அண்ணளவாக 39 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளதுடன் தெற்கு அதிவேக வீதியினூடாக பயணம் வெய்வதற்கு காலியிலிருந்து பின்னதுவ நுழைவு வீதியினூடாக 37 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளதனால் அதற்காக பொதுப் போக்குவரத்து வசதிகள் இல்லாமையினாலும் யக்கல்முல்ல, நெலுவ, தவலம, நாகொட மற்றும் வதுரம்ப ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள மக்கள் அதற்கு போய்ச்சேருவதற்கு அதிக சிக்கல்கள் உள்ளதனாலும் உத்தியோகததர்கள் அலுவலகத்திற்கு பயணம் செய்வதற்கு போக்குவரத்து சிக்கல்கள் உள்ளதனாலும் அந்த இடத்தில் காலி மாவட்ட செயலகத்தினை செயற்படுத்துவது பிரச்சினையானதாகும். கடமைகளை மேற்கொள்ளும் போது காலி நகரத்திற்கு பொதுமக்களும் உத்தியோகத்தர்களும் வசதியாக அடைந்துகொள்ளக்கூடிய ஒரு இடம் அத்தியவசியமானது என்பதனால், அரசாங்கத்தின் மதிப்பீட்டினை மிகைத்திருக்காமையினால் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு அண்மையில் இருத்தல் ஆகிய விடயங்களின் காரணமாக தற்பொழுது காலி மாவட்ட அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கட்டிடம் மாதாந்த வாடகை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது அரசாங்க மதிப்பீட்டின் அடிப்படையில் காணி நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தை செயற்படுத்துவதற்காக	கிரயத்தை குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.	
(எ)	ஆணைக்குழுவின் ஒன்றிணைந்த கணக்கீட்டு மென்பொருள் முறைமை 2019 மே 22 ஆந் திகதி ஒரு தனியார் நிறுவனத்திடம் ரூபா 8,500,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் அத்தகவல் முறைமையின் மூலம் கிடைக்க வேண்டிய காணி குத்தகைப் பணம் தொடர்பான தகவல்களை தகவல் முறைமயின் வாயிலாக பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் திமெ்பர் 31 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	கிடைக்க வேண்டிய குத்தகைப் பணம் தொடர்பான தகசவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மென்பொருள் முறைமையினை தயாரித்து தருமாறு அந்த நிறுவனத்திடம் பல தடவைகள் வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் எங்கள் நிறுவனத்திற்கு வருகைதந்து முறைமையை தயாரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும் இன்றுவரை அது தயாரித்து முடிவடைந்திருக்கவில்லை.	ஸ்தாபிக்கப்பட்ட ஒன்றிணைந்த கணக்கீட்டு மென்பொருள் முறைமையின் மூலதம் கிடைக்க வேண்டிய காணிக் குத்தகைப் பணம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் தயாரித்தல் வேண்டும்.
(ஏ)	ஆணைக்குழுவிற்காக முழுமையான ஒன்றிணைந்த கணனி முறைமையினை உருவாக்குதல், அபிவிருத்தி செய்தல், அமுல்ப்படுத்துதல் என்பவற்றிற்காக 2002 ஆம் ஆண்டின் போது ஒரு தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 17,000,000 தொகையை மீளப் பெற்றுக்கொள்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற பொது தொழில்முயற்சிகள் தொடர்பான குழுவினால் தெரியப்படுத்தியிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த விடயம் தொடர்பாக சட்ட உதவியினை வேண்டி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு 2023-08-24 ஆந் திகதியிடப்பட்ட ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் 2023-09-06 ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்கம் இந்த ஆணைக்குழுவிற்கு ஒரு கடிதத்தினை அனுப்பிவைத்துளது. அந்த கடிதத்திற்கு இணங்க 2023-11-03 ஆந் திகதி அரசாங்க வழக்கறிஞருடன் ஒரு தொலைபேசி கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. அதன் பின்னர் 2023-11-14 ஆந் திகதி அரசாங்க வழக்கறிஞருக்கு அவரினால் கேட்கப்பட்ட தகவல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2024-12-20 ஆந் திகதியுடனான கடிதத்தில் தனது அலோசனையை வழங்கி அரசாங்க வழக்கறிஞரினால் கால வரம்பு கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் பணத்தை சட்ட ரீதியாக மீளப்பெற்றுக்கொள்வதற்கு முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின பிரகாரம் மேற்கூறிய இன்போசெட் கம்பனி புதிதாக தேறர்றுவிக்கப்படாமையின் காரணமாக அதற்கு சட்டரீதியான தனித்துவம் இல்லை என்பது தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.	செலுத்திய பணத்தை மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஐ)	ஆணைக்குழுவின் காணிகளை அளவீடு செய்து ஒழுங்குவிதிப்படி செய்த சந்தர்ப்பத்தில் காணிகளை துண்டு போடுபவர்களால் மீளளிப்புச் செய்வதற்கு உட்பட்டு காணிகளை அளவீடு செய்த உத்தரவு பெற்ற நில அளவையாளர்களுக்கு 2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட ரூபா 33,229,487 மொத்த தொகையில் மீளாய்வாண்டு வரை ரூபா 9,954,378 மாத்திரம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் இன்னும் கிடைக்க வேண்டிய மீதி ரூபா 23,275,108 ஆகும்.	பத்து இலட்சம் உறுதிகளை பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்தில் அளவீடு செய்யப்படாத காணிகளை துரிதமாக அளவீடு செய்வதற்காக அமுல்ப்படுத்தப்பட்ட ஒரு செயற்திட்டத்திற்கு உட்பட்டு காணிகளை அளவீடு செய்த உத்தரவு பெற்ற நில அளவையாளர்களுக்கு 2019, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட ரூபா 33,229,486.36 தொகையில் ரூபா 9,954,377.00 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் இன்னும் கிடைக்க வேண்டிய மீதியான ரூபா 23,275,109.36 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	துண்டு போடுபவர்களுக்கு காணிகளை வழங்கும் சந்தர்ப்பத்தில் நில அளவை கட்டணத்தை அறவீடு செய்தல் வேண்டும்.
(ஒ)	ஆணைக்குழுவிற்குச் சொந்தமான நாவலப்பிட்டி டில்டன் தோட்ட காணியில் தேயிலை தொழிற்சாலையுடனான 02 ஏக்கர் 01 ரூட் 05 பேச்சஸ் அளவிலான காணி முப்பது ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் 1997 ஆகஸ்ட் 30 ஆந் திகதியிலிருந்து வருடாந்த குத்தகை ரூபா 270,000 வீதம் வரையறுத்த சுபர் இன்டஸ்ரீஸ் என்ட் எக்ஸ்போட் தனியார் கம்பனிக்கு காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 22(1) (ஆ) பிரிவின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. பின்னர் 2008 ஆம் ஆண்டின் போது ஒரு நபரினால் மேற்கூறிய நிறுவனத்தின் வியாபாரப் பெயருடன் காணி பெறுப்பேற்கப்பட்டிருந்தும் இது சம்பந்தமாக ஆணைக்குழு அங்கீகாரம் மற்றும் உடன்படிக்கை மேற்கெள்ளப்படாது முறையற்ற வகையில் பயன்படுத்துவதற்கு ஆணக்குழு வாய்ப்பளித்திருந்ததன் காரணமாக 1997 ஆம் ஆண்டிலிருந்து 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 27 ஆண்டுகளுக்காக அறவிட வேண்டிய குத்தகைப் பணம் ரூபா 18,403,926 தொகை உரிய குத்தகைதாரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.	2008 ஆம் ஆண்டின் போது இக்காணி பகுதியை பொறுப்பேற்று 2022 ஆம் ஆண்டு வரை குத்தகை செலுத்தியதன் காரணமாக நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றத்தின் 79899/18 ஆம் இலக்க 2021-03-26 ஆந் திகதிய வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் அவருக்கு இந்த ஆதனத்திலிருந்து வெளியேற்றுவதற்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்குத் தீர்ப்புக்கு இணங்க காணியை பயன்படுத்தும் உரிமையை பொறுப்பேற்று மீண்டும் நாவலப்பிட்டி பல்நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. நிலுவைக் குத்தகைப் பணத்தை திலக் குமார உடகம எனற நபரிடமிருந்து அறவீடு செய்வது சம்பந்தமாக 2024-01-10 ஆந் திகதியிடப்பட்ட கடிதம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. தொலைபேசி மூலம் பல சந்தர்ப்பங்களில் கவனம் செலுத்தப்பட்டதுடன் 2024-11-04 ஆந் திகதி அரசாங்க சிரேஷ்ட வழக்கறிஞருக்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து ஆலோசனையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவைக் குத்தகை அறவீடு செய்யப்படுதல் வேண்டும்.
(ஓ)	காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 22(1)(ஆ)	இக்காணியை குத்தகை அடிப்படையில் பெற்ற சுவாமியார் மரணமடைந்துள்ளார்.	பொறுப்பேற்ற காணி அதிகாரச்சட்டத்தின்

	பிரிவின் பிரகாரம் காலி அக்மீமன இலச்சுமி பீ தோட்டம் எனும் பெயருள்ள காணியில் 08 ஏக்கர்கள் 30 ஆண்டுகள் காலத்திற்காக 05 ஆண்டுகளிலிருந்து 05 ஆண்டுகளுக்கு குத்தகையை மீளாய்வு செய்து 2005 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு பெறுமதிக்கு அந்த ஆண்டிலிருந்து ''சஹன சிறுவர் அபிவிருத்தி மன்றத்திற்கு'' குத்தகை அடிப்படையல் வழங்குவதற்கு 2014 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் உரிய காணி சம்பந்தமாக பிரச்சினையுடனான நிலைமை உருவாகியுள்ளது எனக் கூறி காணியை பயன்படுத்தும் உரிமையானது ஒரு தலைப்பட்சமாக ஆணைக்குழுவினால் 2021 ஆம் ஆண்டின் போது பெறுப்பேற்றிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் சஹன சிறுவர் அபிவிருத்தி மன்றத்திடமிருந்து நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 6,998,800 தொகையை அறவீடு செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குத்தகை செலுத்தாமை மற்றும் சுவாமியார் மரணமடைந்தமை சம்பந்தமாக 2021-03-26 ஆந் திகதி நடைபெற்ற ஆணைக்குழு கூட்டத்தின் போது ஆணைக்குழுவிற்கு விளக்கமளிக்கப்பட்டதுடன் அதன் போது காணியை ஒரு தலைப்பட்சமாக பயன்படுத்தும் உரிமையைப் பொறுப்பேற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழு தீர்மானத்தின் பிரகாரம் காணியை பயன்படுத்தும் உரிமை மீண்டும் ஆணைக்குழுவினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. நிலுவைக் குத்தகையை அறவீடு செய்வது தொடர்பாக சட்டமா அதிபரிடம் ஆலோசனையைப் பெற்று மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	குறிக்கோள்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டியதுடன் நிலுவைக் குத்தகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஒள)	காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான ஹொரண வேவல, ஹேகல்ல தோட்டத்தின் பங்களாவத்த காணி களுத்துறை மாவட்டத்திலுள்ள ஹொரண பிரதேச செயலகப் பிரிவின் வாஹேன வடக்கு 615 பீ கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குரிய காணியில் பிரிக்கப்படாத 14 ஏக்கர் 01 ரூட் 9.9 பேச்சஸ் காணி சுவாமியாரின் பெயரினை (மரணமடைந்த) முறையற்றதாக பயன்படுத்தி 05 ஏக்கர்களும் மற்றுமொரு காணி உடையையை முறையற்ற வகையில் 66 பேச்சர்ஸ் அளவினையும் பயன்படுத்திக் கொண்டிருந்தும் அதிகாரச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் அது தொடர்பாக சட்ட நடவடிக்கை	ஹொரண பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ஹேகல்ல தோட்டம் ஆணைக்குழுவிற்கு வெளிப்படுத்தப்பட்ட காணியாகும். இக்காணி தொடர்பாக ஆணைக்குழுவினால் சுவாமி அவர்களுக்கு எதிராக பொலிசில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டு வெளியேற்றுவதற்குரிய சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுமதியின்றி பயன்படுத்துகின்ற சுவாமி அவர்களை மேற்கூறிய காணியிலிருந்து வெளியேற்றுவதற்காக 1979 இன் 07 ஆம் இலக்க அரசாங்கத்தின் காணிகள் (காணி உரிமையை மீளப் பெற்றுக்கொள்ளல்) அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரவின் பிரகாரம் வெளியாக்கும் அறிவித்தல் தலைவரின் கையொப்பத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய வெளியாக்கும் அறிவித்தலின் நிர்ணயிக்கப்பட்ட நாள் 2025-04-28 ஆந்	அனுமதியில்லாது பயன்படுத்துபவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	எடுக்கப்பட்டிருக்கவில்லை.	திகதியாகும். எவ்வாறாயினும் காணியின் பயன்படுத:தம் உரிமை சம்பந்தமாக பிரச்சினையுடனான நிலைமை உருவாகியுள்ளதனால் கள நிலைமை விசாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுஜாதா வீரக்கோன் என்பவரினால் ஆணைக்குழுவிற்கு எதிராக மேன்முறையீட்டு வழக்கு தொடுக்கப்பட்டிருந்தும் அதன் தீர்ப்பு ஆணைக்குழுவிற்கு சாதகமான வகையில் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது அவரினால் உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதனால் மேலதிக நடவடிக்கை எடுத்தல் நிறுத்தப்பட்டுள்ளது.	
(க)	கொழும்பு மாவட்டத்திலுள்ள கொலன்னாவை, வெல்லம்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள ஜாகொடுவ தோட்ட காணியில் 01 ரூட் 9.79 பேச்சஸ் அளவு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 22(1)(ஆ),(இ) பிரிவுகளின் கீழ் வருடாந்த குத்தகை ரூபா 1,590,000 வீதம் ஒரு தனிப்பட்டவருககு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இக்காணியின் சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் அது ரூபா 26,500,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் அந்த மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் கணிக்கப்பட்ட குத்தகை மிகவும் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்ததனால் அதனை செலுத்த முடியாது என குத்தகைதாரர் தெரிவித்திருந்ததுடன் இன்றுவரை எந்த குத்தகைப் பணமும் அறவீடு செய்யபபட்டிருக்கவில்லை.	ஜாகொடுவ தோட்டம் என்ற பெயரிலான காணியில் ஒரு பகுதியை சரச்சந்திர அவர்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு மதிப்பீடு கோரப்பட்டிருந்தும் அந்த மதிப்பீடு அதிகமானது எனத் தெரிவித்ததன் காரணமாக மீண்டும் மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. இது தொடர்பான மதிப்பீடு இன்றுவரை கிடைக்கவில்லை. எவ்வாறாயினும் இந்த குத்தகைதாரருக்கும் காணியை துண்டுபோடுபவருக்கும் இடையே CAW34/2024 ஆம் இலக்க வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு எதிராளியாக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற தீர்ப்பு கிடைத்ததன் பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.	அரசாங்க மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை அறவிடப்படுதல் வேண்டும்.
(கா)	ஆணைக்குழுவிற்குச் சொந்தமான குருனாகல் மாவட்டத்திலுள்ள இப்பாகமுவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ராகெதர தோட்டக் காணியில் 70 ஏக்கர்களை காரீயம் அகழ்வதற்காக அரசாங்க	இக்காணி தொடர்பாக 2022-08-18 ஆந் திகதி பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீடு கோரப்பட்டுள்ள போதிலும் மேற்கூறிய மதிப்பீடு கிடைக்காமையின் அடிப்படையில் மீண்டும் 2023-03-29 ஆந் திகதி மாகாண மதிப்பீட்டாளருக்கு ஞாபகக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.	முறையான குத்தகை உடன்படிக்கையினை மேற்கொண்டு அரசாங்க மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகையை அறவீடு

	மதிப்பீடாளரின் நிகழ்கால மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் 05 ஆண்டுகள் காலத்திற்கு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு ஒரு தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு 2011 ஒக்தோபர் 18 ஆந் திகதிய 7751 ஆவது ஆணைக்குழு பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2011 ஆம் ஆண்டின் போது குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள இந்த காரீயத்துடனான காணிக்காக 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கிடைத்த ரூபா 8,937,144 முற்பணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே கணக்காய்வுத் திகதி வரை 13 ஆண்டுகள் கடந்திருந்தும் அறவீடு செய்வதற்கும் இரண்டு தரப்பினர்களுக்குமிடையே குத்தகை உடன்படிக்கையை மேற்கொள்வதற்கும் ஆணைக்கு இன்றுவரை தவறியிருந்தது.	அதற்கிணங்க அரசாங்க மதிப்பீடு கிடைக்காமையின் காரணமாக அண்ணளவான மதிப்பீட்டினை அடிப்டையாகக் கொண்டு ரூபா 8,937,144 தொகை அறவிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் பின்னர் உரிய செம்மையாக்கல்களை மேற்கொண்டு நிலுவைக் குத்தகைப் பணத்தை அறவிட்டு முறைப்படியான குத்தகை உடன்படிக்கையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(கி)	கம்பஹா மாவட்டத்தின் திவுலபிடிய பிரதேச செயகப் பிரிவில் அமைந்துள்ள கலிம்புரே தோட்டக் காணியின் காணித்துண்டு இலக்கம் 01 இன 12 ஏக்கர் 02 ரூட் 4.48 பேச்சஸில் அமைந்துள்ள கருங்கற்களுடனான காணி 2011 யூலை 26 ஆந் திகதிய 7628 ஆம் இலக்க ஆணைக்குழு பத்திரத்தின் மூலம் ஒரு தனியாருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2024 திசெம்பர 31 ஆந் திகதி வரையும் ரூபா 5,590,000 காணிக்காக கிடைக்க வேண்டி இருந்தது. மேலும் இக்காணி குத்தகைக்கு வழங்கப்பட்டு 13 ஆண்டுகள் அளவில் கடந்திருந்தும் உரிய குத்தகைதாரர் கருங்கற்களை இதுவரை அகற்றி இருக்காததனால் அதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஆணைக்குழுவினால் எடுக்காததன் காரணமாக அதன் மூலம் உழைக்க கூடியதாகவிருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது என	குத்தகையை செலுத்துமாறு குத்தகைதாரருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இக்கருங்கற்கள் உடைத்து அகற்றப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக குத்தகைதாரருக்கு 2024-11-01 ஆந் திகதி ஆணைச்சீட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததனால் குத்தகைக்கு வழங்கியதனை இரத்துச் செய்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.	குத்தகை அடிப்படையில் வழங்கிய கருங்கற்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கும் குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	அவதானிக்கப்பட்டது.		
(கீ)	பதுளை மாவட்டத்தில் கந்தகெடி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தம்பிடிய தோட்டம் எனும் பெயருள்ள காணிக்குரிய திட்ட வரைபடம் இலக்கம் 801 இன் காணித்துண்டு இலக்கம் 01 பகுதியின் 04 ஏக்கர்களிலுள்ள பளிங்குகற்கள் மற்றும் கருங்கற்கள் குத்தகை அடிப்படையின் கீழ் 2012 மார்ச் 28 ஆந் திகதிய 7928 ஆம் இலக்க ஆணைக்குழு பத்திரத்தின் மூலம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 5,653,566 குத்தகைப் பணம் காணிக்காக கிடைக்க வேண்டியிருநதது. எவ்வாறாயினும் ஆணைக்குழுவினால் கனிய வளங்களை குத்தகைக்கு வழங்கும் போது குத்தகைப் பணம் அறவிட வேண்டிய ஒரு நிர்ணயிக்கப்பட்ட நடைமுறை பின்பற்றப்படாமையின் காரணமாக இந்த பளிங்கு கற்களை குத்தகை அடிப்படையில் வழங்கி மீளாய்வாண்டு வரை 12 ஆண்டுகளுக்கு அண்மதித்த காலம் கடந்திருந்தும் அக்கனிய வளங்களின் மூலம் ஆணைக்குழு உழைத்த வருமானம் நிதிக்கூற்றுக்களில் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை.	அறவிட வேண்டிய பணம் தொடர்பாக தொடக்கத்தில் 50 சதவீத பணத்தை முதலாவதாக செலுத்துவதற்கும் மிகுதியை ரூபா 500,000 வீதம் 03 தவணைகளாக செலுத்துவதற்கும் 2024-09-13 ஆந் திகதி குத்தகைதாரரின் மகனாகிய திரு.என்.டீ.ஆர்.எஸ். தசநாயக்க அவர்களினால் எழத்துமூலம் இணக்கப்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரியினை உள்ளடக்கி ரூபா 500,000 வீதம் 02 தவணைகள் 2024-09-13 மற்றும் 2025-01-31 திகதிகளில் கொடுப்பனவு செய்யப்பட்டது. இக்குத்தகைப் பணத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கிய குத்தகைதாரர் மரண மடைந்துள்ளதுடன் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க முடியுமா என்பது தொடர்பாக சட்டப் பிரிவின் மூலம் விசாரணை செய்து பார்த்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.	அறவிட வேண்டிய கட்டண முறைமையை தீர்மானித்து அதற்கிணங்க நிலுவைப் பணத்தையும் உள்ளடக்கி குத்தகை அறவிடப்படுதல் வேண்டும்.
(கு)	காணிப் பதிவேட்டில் கருங்கற்களை குத்தகைக்கு வழங்கிய 211 நபர்களுக்கு 645 ஏக்கர் 10.58 பேச்சஸ் 103 குத்தகைதாரர்கள் தொடர்பாக கிடைக்க வேண்டிய குத்தகை வருமானம் மாத்திரம் 2024 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஆணைக்குழுவிற்குச் சொந்தமான கனிய வளங்களான கருங்கற்களை அகழ்தல் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு முறைப்படியாக குத்தகை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	கருங்கல் சம்பந்தமான 211 கோவைகளுக்காக நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக வேண்டுதல்கள் சமர்ப்பித்திருந்தும் நிறுவன பரிந்துரைகள் கிடைக்காமை, கிராமவாசிகளின் எதிர்ப்பு, சட்ட ரீதியான நிலைமை மற்றும் ஏனைய விடயங்களின் காரணமாக அந்த அனைத்து செயற்திட்டங்கள் சம்பந்தமாகவும் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. கருங்கற்களை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக வருமானப் பிரிவின் மூலம் குத்தகைப் பேரேடு பேணப்படாமையால் அனைத்து கருங்கல் வணிகம் தொடர்பான குத்தகைகள்	குத்தகைக்கு வழங்கிய கருங்கல் காணி வருமானங்களை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.

		செம்மையாக்கப்படவில்லை. 2023-09-15 ஆந் திகதி ஆணைக்குழுவின் மூலம் இது சம்பந்தமாக ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உரிய செம்மையாக்கல்களை மேற்கொண்டு தற்பொழுது சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது அமுல்ப்படுத்தப்படுகின்ற கருங்கற்களை குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமாக காணிப் பதிவேட்டின் தகவல்களையும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	
(கூ)	2021 ஆம் ஆண்டில் ரூபா 350 மில்லியன் ஈடுபடுத்தப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட சேதனப் பசளை செயற்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 22 மில்லியன் மாத்திரமாக இருந்ததன் அடிப்படையில் இச்செயற்திட்டம் வெற்றியளிக்காத ஒரு செயற்திட்டமாக 2022 ஆம் ஆண்டின் போது முடிவுறுததப்பட்டிருந்தது. செயற்திட்ட்த்திற்காக ரூபா 31 மில்லியனுக்கு மேற்பட்ட அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இச்சொத்துக்களில் ஒரு பகுதி அரசாங்க நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் சம்பந்தமாக 2023 மார்ச் 28 ஆந் திகதி அமை.ப.23/383/615/017 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் செயற்திட்டம் வெற்றியளிக்காமைக்கான காரணம் மற்றும் அதற்கு பங்களிப்புச் செய்த நபர்கள் தொடர்பாக சுதந்திரமான ஒரு புலனாய்வினை மேற்கொள்வதற்கு மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட ஒழு குழு காணி அமைச்சு செயலாளரினால் 2023 ஏப்ரல் 29 ஆந் திகதி நியமிக்கப்பட்டு அறிக்கையினை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தும் அந்த அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சு செயலாளரினால் 2023	இயந்திரங்கள் மற்றும் பசளை உற்பத்திக்கு பயன்படுத்திய அனைத்து இயந்திரங்களும் உபகரணங்களும் அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கு இணங்க முப்படைகளுக்கு இலங்கை விமானப் படைக்கு சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு மற்றும் எல்ல பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்செயங்திட்டம் சம்பந்தமாக சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களில் சிலர் தொடர்பாக ஊழியர் சேமலாப மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 367,625 தொகையை செலுத்துவதற்கு முடியாதிருந்ததானது அந்த ஊழியர்களின் தகவல்களைப் பேணுவதிலுள்ள பிரச்சினைகளின் காரணத்தினாலாகும். இந்த செலுத்த வேண்டிய பணம் சேதனப் பசளை செயற்திட்டம் தொடர்பான கணக்ககளுக்கு செலவுவைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது முடிவுறுத்தப்பட்டுள்ள இச்செயற்திட்ட நடவடிக்கைகள் 2022-07-14 ஆந் திகதியிலிருந்து வரிசை அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதனால் இக்கட்டிடங்கள் சம்பந்தமாக அமைச்சின் மூலம் எடுக்கப்படுகின்ற தீர்மானத்தின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	புலனாய்வினை மேற்கொண்டு அதற்கிணங்க பொறுப்புக்கூற வேண்டிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நவம்பர் 14 ஆந் திகதி நியமிக்கப்பட்ட ஒரு குழுவின் மூலம் செயற்திட்டத்தின் பொருட்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் விமானப்படை, சிவில் பாதுகாப்பு திணைக்களம், எல்ல பிரதேச சபை என்பவற்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 22 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட 40 x 100 அடி அளவுடைய 05 பசளை நிலைங்கள் விளைவற்றுக் காணப்பட்டன என அவதானிக்கப்பட்டது.

(கெ) ஆணைக்குழுவினால் பொறுப்பேற்கப்பட்ட காணிகளுக்கு இழப்பீடு செலுத்தும் நோக்கத்தில் காணிகளை வழங்குவதன் மூலம் கிடைக்கின்ற வருமானம், காணி விற்பனை வருமானம், வயல் காணி விற்பனை வருமானம் என்பவற்றிலிருந்து முறையான அங்கீகாரமின்றி 40 சதவீதம் வீதமாக வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒரு ஒதுக்கம் உருவாக்கப்பட்டு பேணப்பட்டு வந்ததுடன் அந்த ஒதுக்கத்தின் பெறமதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,474 மில்லியனாக இருந்த போதிலும் அந்த ஒதுக்கத்தினை உருவாக்கிய நோக்கத்திற்குப் புறம்பாக அவ்வப்போது ரூபா 2,535 மில்லியனுக்கு அண்மித்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

40 சதவீத வீதமாக வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்க தொகை இழப்பீட்டினைச் செலுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் அப்பணம் 2020 ஆம் ஆண்டு வரை நிறுவனத்தில் நிலையான வைப்பாக பேணப்பட்டது. எனினும் 2021 ஆம் ஆண்டிலிருந்து பல சந்தர்ப்பங்களில் பொதுத் திறைசேரியின் வேண்டுதலின் அடிப்படையில் ரூபா 1,465 மில்லியன் பணம் பொதுத் திறைசேரிக்கு வழங்கப்பட்டது. மேலும் நிறுவனத்தில் காணப்பட்ட ஒரு வழக்கிற்கான இழப்பீட்டுப் பணமாக ரூபா 500 மில்லியனும் தலைமை அலுவலக கடடிடத்தினை கொள்வனவு செய்வதற்காக ரூபா 250 மில்லியனும் நிறுவனரீதியான வருமானவரி கொடுப்பனவுக்காக ரூபா 320 மில்லியன் தொகையும் ஆக முழுப் பணமாக ரூபா 2,535 மில்லியன் செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. அதற்கிணங்க இன்றுவரை நிறுவனத்தில் ஒதுக்கங்களில் குறிப்பிடத்தக்க அளவான தொகை நிறுவனத்தின் வைப்புக்களில் காணப்படவில்லை என குறிப்பிடுகிறேன்.

ஒதுக்கத்தினை உருவாக்கும் போது திறைசேறியின் அங்கீகாரத்துடன் உருவாக்குதல் வேண்டும்.

(கே) எத்ஹொடகல நிந்தகம காணியில் 49 ஏக்கர் 03 ரூட் 30 பேச்சஸ் அளவானது ஒரு கம்பனிக்கு 2006 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 495 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையின் மூலம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் நிலுவைக் குத்தகை செலுத்தாமையின் அடிப்டையில் 2018 ஆகஸ்ட் 11 ஆந் திகதி குத்தகை நிலுவைக் குத்தகைப் பணத்தை செலுத்த தவறியிருக்குமாயின் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் டோல் லங்கா கம்பனி சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக்குழுவிற்கு ஒரு கடப்பாடு இல்லை எனவும் தெரிவிக்கிறேன்.

நிலுவைக் குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் குத்தகையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகள் தொடர்பாக

உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டது என அவதானிக்கப்பட்டது. பின்னர் நிலுவைக் குத்தகை செலுத்தாமைக்கு எதிராக நிறுவனத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட ஒரு வழக்கின் காரணமாக 2022 ஆம் ஆண்டின் இறுதியில் நிலுவை குத்தகைப் பணத்தை முழுமையாக செலுத்தியதனால் தொடுக்கப்பட்ட வழக்கு மீண்டும் வழக்கினை தொடுக்கும் உரிமைக்கு உட்பட்டு 2023-03-10 ஆந் திகதி வாபஸ் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2024-03-31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவைக் குத்தகை பணம் ரூபா 5,604,252 தொகையினை அறவீடு செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் மேற்கூறிய குத்தகையை அடிப்டையாகக் கொண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட காணி அக்கம்பனியின் மூலம் இன்னுமொரு கம்பனிக்கு உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.	பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 மனித வளங்கள் முகாமைத்துவம் கணக்காய்வு அவதானிப்புக்கள்

முகாமைத்துவத்தின் கருத்துரைகள்

சிபாரிசுகள்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அணைக்குழுவின் அங்கீகரித்த மற்றும் உள்ளபடியான ஆளணியினர் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

ஆளணியனர்	அங்கீகரித்த எண்ணிக்கை	உள்ள படியான எண்ணிக்கை	வெற்றிடங்களின் எண்ணிக்கை
சிரேஷ்ட முகாமைத்துவம்	05	05	-
மத்திய முகாமைத்துவம்	33	31	02
தொழில்நுட்ப	06	03	03
கனிஷ்ட முகாமைத்துவம்	04	03	01
• தனியார் மயப்படுத்தியுள்ள பதவி	28	20	-

முகாமைத்துவ உதவியாளர்	215	135	80
• தனியார் மயப்படுத்தியுள்ள பதவி	40	40	-
ஆரம்ப மட்டம்	61	37	24
மொத்தம்	**392**	**274**	**110**
	.....	.....	.....

(i)	ஆணைக்குழுவின் கமத்தொழில் காணிகளை ஒப்படைத்தல், முதலீட்டிற்காக காணிகளை ஒப்படைத்தல், நியதிச்சட்ட நிர்ணயிப்புக்களுக்காக காணிகளை ஒப்படைத்தல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 2018 யூன் 27 ஆந் திகதிய அமைப/18/1126/829/002 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ஒரு ஆண்டு காலத்திற்காக 214 உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு அவர்களின் செயலாற்றலுக்கு இணங்க 03 ஆண்டுகள் காலத்திற்காக அந்த உத்தியோகத்தர்களின் சேவையை நீடிக்கலாம் என அதில் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க அங்கீகரித்த ஆளணியினர்களுக்காக 11 சிரேஷ்ட முகாமையாளர்கள், 09 மத்திய முகாமையாளர்கள், 21 கனிஷ்ட முகாமையாளர்கள், 153 முகாமைத்துவ உதவியாளர்கள், 10 அலுவக உதவியாளர்கள், 10 சாரதிகள் ஆகியோரை சேர்த்துக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் அதற்கு முரணாக 12 முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் 08 அலுவலக உதவியாளர்கள் மிகையாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். மேலும் அந்த எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றக்கொள்ளாது உரிய 03 ஆண்டுகள் முடிவடைந்ததன் பின்னர் அங்கீகாரமின்றி 138 முகாமைத்துவ உதவியாளர்கள் 10 சாரதிகள மற்றும் 16 அலுவலக உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.	இது தொடர்பாக அமைப/24/0689/615/013 ஆம் இலக்க 2024-06-12 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் ஒப்பந்த ஊழியர்கள் தொடர்பாக அதில் குறிப்பிடப்படவில்லை. 25/2014 மற்றும் 25/2014(i) ஆம் இலக்கங்களின் கீழ் நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்களை வெற்றிடங்கள் காணப்படுகின்ற சமாந்தர பதவிகளுக்காக நியமிப்பதற்கு அந்த அமைச்சரவை தீர்மானத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அந்த அமைச்சரவை தீர்மானமானது 12797 ஆம் இலக்க 2024-07-02 ஆந் திகதிய ஆணைக்குழு பத்திரத்தின் மூலம் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 25/2014 இற்கு இணங்க நிரந்தமாக்கிய ஊழியர்களை சேவை மூப்பினை அடிப்படையாகக் கொண்டு கல்வித் தகமைகள் பரீட்சிக்கப்பட்டு தெரிவுசெய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஒரு குழுவினை நியமித்து தனிப்பட்ட கோவைகள் பரீட்சிக்கப்பட்டதுடன் அதற்கு உள்ளக கணக்காய்வு வழங்கிய அறிக்கைகளுடன் 814 ஆவது ஆணைக்குழு கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் நேர்முகப் பரீட்சையை நடாத்தி தகமையுள்ளவர்கள் நியமிக்கப்பட வேண்டும் எனவும் நேர்முக பரீட்சை	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு இணங்க ஊழியர் எண்ணிக்கையை திருத்தம் செய்தல் வேண்டும்.

		சபையை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்து புள்ளிகள் வழங்கும் நடைமுறை பிரேரிக்கப்பட்டு அடுத்துவரும் ஆணைக்குழு கூட்டத்திற்கு சமர்ப்பிக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எனவே உரிய தகவல்கள் 2025-03-18 ஆந் திகதி நடைபெற்ற 816 ஆவது ஆணைக்குழு கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் பிரதம மந்திரியின் செயலாளரின் தலைமையிலான குழுவிற்கு அமைச்சின் மூலம் சமர்ப்பிப்பதற்கு தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2025-03-31 ஆந் திகதிய கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.	
(ii)	2021 மார்ச் 26 ஆந் திகதிய 11384 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு பத்திரத்திற்கு இணங்க 34 முகாமைததுவ உதவியாளர் பதவிகள் மற்றும் 04 ஆரம்ப மட்ட பதவிகளுக்கு (ஒப்பந்த அடிப்படையில்) ஆட்சேர்க்கப்பட்டிருந்தும் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஆணைக்குழுவில் அப்போது காணப்பட்ட கடமைரீதியான தேவைப்பாட்டின் அடிப்படையில் ஆணைக்குழு பத்திரத்தினை அனுப்பிவைத்து முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் ஆரம்ப பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாததுடன் அது சம்பந்தமாக பல்வேறு சந்தர்ப்பங்களின் போது இத்திணைக்களத்துடன் கலந்துரையாடும் போது அதற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவைப் பத்திரத்தினை அனுப்பிவைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க அமைப/23/0293/615/008 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரம் அனுப்பிவைக்கப்பட்டதுடன் மேலே குறிப்பிட்டவாறு ஆணைக்குழு பத்திரத்தின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொண்ட	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு இணங்க ஊழியர் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		நியமனங்களுக்காக அமைச்சரவையின் மேல் அங்கீகாரம் வழங்குவது சம்பந்தமாக இணக்கப்பாட்டினை வழங்க முடியாது என தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆளணியினரின் ஒப்பந்த காலம் 2025-08-31 ஆந் திகதியில் முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.	
(iii)	2018 யூன் 27 ஆந் திகதிய அமைப/18/1126/829/002 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்ட 16 உத்தியோகத்தர்களுக்கு அவர்களை சேர்த்துக்கொள்வதற்கு எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்தும் முகாமைத்துவ சேவைக் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி நிரந்தர நியமனங்கள் வழங்கி ஒரு பேச்சஸ் ரூபா 1,000 பெறுமதிக்கு 20 பேச்சஸ் வீதம் காணியும் வழங்கப்பட்டிருந்தது. மேலும் அவர்களில் ஒரு நபர் 2025 பெப்ரவரி மாதம் ஆணைக்குழுவின் சேவையை கைவிட்டுச் சென்றிருந்தார்.	ஊழியர்களை அடிப்டையாகக் கொண்டு காணிகளை வழங்குவதற்கான அடிப்டைத் தகமைகளாக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவது ஆணைக்குழுவில் தொடர்ச்சியாக 05 ஆண்டுகள் திருப்தியான சேவைக் காலத்தை நிறைவேற்றுதல் மற்றும் ஒழுங்கீனமான நடவடிக்கைகளுக்காக உட்பட்டிருக்காத நபராக இருத்தலாகும். அத்தகமைகளை நிறைவேற்றியுள்ள ஊழியர்கள் அவ்வப்போது ஆணைக்குழுவிற்கு அறிக்கைகளை சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2020-09-16 ஆந் திகதி நடைபெற்ற ஆலோசனைக்குழு கூட்டத்தின் போது சேவைக்காலம் 05 ஆண்டுகளை பூரணப்படுத்திய ஆளணியினர் காணியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக காத்திருத்தல் பட்டியலின் அடிப்படையில் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	அதிகாரச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.